எம்.சி.ஓ.பி எண்: 1701/2025 தேதி: 14.07.2026

மசா. : 1

பெயர் : Lalithkumar Surana

த/பெ. : Hanumamal Surana

வயது : 59

**சத்திய பிரமாண செய்விக்கப்படுகிறார்**

**முதல் விசாரணை**

நான் இம்மனுவில் மனுதாரர் ஆவேன். நான் என்னுடைய முதல் விசாரணை சாட்சியத்திற்காக சத்திய பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். அதிலுள்ள கையொப்பம் என்னுடையது தான். அதனை படித்து பார்த்து கையொப்பம் செய்தேன். அதில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியும். மேலும் என்னுடைய சாட்சியத்திற்கு ஆதரவாக சான்று ஆவணங்கள் மசாஆ 1 முதல் 25 வரை தாக்கல் செய்கிறேன். மசாஆ 7,8,9,10,11,12,24,25 ஆவணங்கள் எதிர்தரப்பு ஆட்சிபேனைக்கு உட்பட்டு குறியீடு செய்யப்படுகிறது. மனுப்படி இழப்பீடு வழங்க வேண்டுகிறேன்.

**2 ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

என் மகன் 06.02.2025 அன்று இறந்துவிட்டார் என்றால் சரி. என் மகன் இருசக்கரவாகனத்தில் சென்னை வால்டேக்ஸ் ரோடில் இரவு 11.10 மணிக்கு சாலையின் இடது பக்கம் சென்றார். அப்போது பின்னால் வேகமாக வந்த லாரி என் மகன் மீது மோதி விபத்து ஏற்பட்டது. முதல் தகவல் அறிக்கையில் என் மகன் மீது லாரியின் பின்பக்கம் 3 வது டயர் உரசி விபத்து ஏற்பட்டதாக உள்ளது என்றால் சரி. அவ்வாறு 3 வது டயர் உரசி என் மகன் இருசக்கரவாகனத்திலிருந்து கிழே விழுந்தார். அதனால் லாரி ஓட்டுநரின் மீது தவறு இல்லை என்றாலும் என் மகனின் மீதுதான் தவறு என்றாலும் சரியல்ல. இந்த விபத்திற்கு என் மகனின் கவனக்குறைவுதான் காரணம் என்றால் சரியல்ல. என் மகன் இறந்தபோது பிரைஸ் வாட்டர் கூப்பர் நிறுவனத்தில் ஆடிட்டராக வேலை பார்த்தார். அவர் செப்டம்பர் 2024 ல் அந்த நிறுவனத்தில் வேலைக்கு சேர்ந்தார். இது சம்பந்தமாக நான் தாக்கல் செய்த மசாஆ 9 தகுந்த நபரால் அளிக்கப்படவில்லை என்றால் சரியல்ல. அந்த ஆவணத்தை பதிவிறக்கம் செய்து தாக்கல் செய்துள்ளேன். மசாஆ 9 ன் படி என் மகன் வேலை செய்தார் என்று சொல்லமுடியாது என்றால் சரியல்ல. என் மகனின் இரண்டு மாத சம்பள பட்டியல் தாக்கல் செய்திருக்கிறேன். அக்டோபர் 2024 டிசம்பர் 2024 மாதங்களுக்குரிய சம்பள பட்டியலை தாக்கல் செய்திருக்கிறேன். தேவைப்பட்டால் மற்ற மாதங்களுக்குரிய சம்பள பட்டியலை தாக்கல் செய்கிறேன். இந்த ஆவணங்களும் அந்த நிறுவன

அலுவலரால் சான்று அளிக்கப்படவில்லை. இந்த ஆவணங்களை பதிவிறக்கம் செய்து தாக்கல் செய்துள்ளேன். என் மகனின் பேன் கார்டு தாக்கல் செய்யவில்லை. தேவைப்பட்டால் அதை தாக்கல் செய்கிறேன். 2021 ம் ஆண்டு பணிக்கு சென்றார். என் மகன் வருமான வரி செலுத்தியதற்கான ஆவணம் தாக்கல் செய்யவில்லை. அதை தாக்கல் செய்தால் அதன் படி என் மகனின் வருமானம் குறைவாக இருந்தால் அதிக இழப்பீடு பெறமுடியாது என்ற நோக்கத்தில் அந்த ஆவணங்களை தாக்கல் செய்யாமல் விட்டு விட்டேன் என்றால் சரியல்ல. என் மகனின் சம்பளம் அவருடைய HDFC வங்கி கணக்கில் செலுத்தப்படும். வங்கி கணக்கு பட்டியலை மசாஆ 25 ஆக தாக்கல் செய்திருக்கிறேன். மசாஆ 10 ல் ஸ்பெசல் அலவன்ஸ் ரூபாய் 41,067/- குறிப்பிடப்பட்டுள்ளது. அது சம்பளத்துடன் சேர்ந்தது அல்ல என்றால் சரியல்ல. ஒவ்வொரு மாத சம்பளத்துடன் ஸ்பெசல் அலவன்ஸ் வழங்கப்பட்டுள்ளது. மசாஆ 10 ல் என் மகனுக்கு வருமான வரி பிடித்தம் செய்யப்பட்டதாக காட்டப்படவில்லை என்றால் சரி. இதற்கு முன்பு என் மகன் வேலை செய்த இரண்டு கம்பெனிகளிலும் வருமான வரி மற்றும் தொழில் வரி செலுத்தியுள்ளார். அதற்காக மசாஆ 11,12 தாக்கல் செய்திருக்கிறேன். மசாஆ 25 பதிவிறக்கம் செய்யப்பட்டதால் அது வங்கி மேலாளர் சான்று அளிக்கவில்லை. தேவைப்பட்டால் மேலலாளரின் சான்று பெற்று தாக்கல் செய்யலாம். மசாஆ 25 ன் படி 31.01.2025 அன்று என் மகனுக்கு ரூபாய் 1,05,467/- சம்பளம் கணக்கில் வரவு வைக்கப்பட்டுள்ளது. அந்த தொகையை என் மகன் வேலை செய்த நிறுவனம்தான் செலுத்தியது என்பதற்கு அந்த நிறுவனத்தை சேர்ந்தவர்களை விசாரிக்கவேண்டும் என்று சொன்னால் சரியல்ல. இந்த விபத்து என் மகனின் அஜாக்கிருதையால் நடந்தது என்றாலும் நான் கேட்டுள்ள இழப்பீடு தொகை அதிகம் என்றாலும் அதற்கான ஆவணங்கள் முறையாக தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. இந்த மனு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

X

**<u>மறுவிசாரணை இல்லை</u>**

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சாட்சியம் சொல்ல சொல்ல கணிப்பொறியின் பதிவு செய்யப்பட்டு வாசித்துக் காண்பித்து அவர் சாி என்று ஒப்புக்கொண்ட பின்பு அவாிடம் கையொப்பம் பெறப்பட்டது.